# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2419 - 2025 ජනවාරි මස10 වැනි සිකුරාදා - 2025.01.10

2419 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II ஆ) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 38 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 40 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கப{ர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, சனவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே.ஜீ. பிரதீப் புஷ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

37 - B 82644 - 403 (2025/01)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் எதிர்வரும் 2025.01.25 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் முற்பகல் 9.00 மணிக்கு முன்னர் குறித்த பொருட்களைப் பார்வையிட முடியும். குறித்த பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட் படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏல விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக செலுத்திப் பற்றுச் சீட்டைப்பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டு அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையுடன் அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல்வேண்டும்.

**பகிரங்க ஏலவிற்பனைப் பொருட்களின் பட்டியல் விபரம்**

**மோட்டார் வாகனங்கள்**

| *S. No.* | *Case No.* | *Registration No.* | *Vehicle Class* | *Engine No.* | *Chassis No.* | *Estimated Value* |
|---|---|---|---|---|---|---|
| 01. | 3261/22 | NP BAG - 7763 | Motor cycle | SF1P47FMD00004499 | SAFARY4S000004499 | 12,500.00 |
| 02. | 2165/17 | NP YS - 9271 | Motor tricycle | AFMBUG50254 | MD2AAAAZZUWG95461 | 160,000.00 |
| 03. | 3184/21 | NP LK - 5307 | Motor Lorry | 497SPTC35KXY667541 | MAT357524C8R39807 | 725,000.00 |

*Boat*

| *S. No.* | *Case No.* | *Boat No.* | *Length* | *Beam* | *Estimated Value* |
|---|---|---|---|---|---|
| 04. | 3201/22 | OFRP-A-1648MNR | – | – | 10,000.00 |

*Out Board Engine*

| *S. No.* | *Case No.* | *Model* | *Horse Power* | *Engine No.* | *Estimated Value* |
|---|---|---|---|---|---|
| 05. | 2003/16 | Suzuki | 9.9 HP | 371736 | 10,000.00 |

*Other Productions Items*

| *S. No.* | *Case No.* | *Productions* | *Estimated Value* |
|---|---|---|---|
| 06. | 2798/19 | 01. Red Colour Jack<br>02. Red Colour Spanner<br>03. Black Colour Spanner<br>04. Grinder<br>05. Keys | 100.00<br>120.00<br>100.00<br>200.00<br>50.00 |
| 07. | 3259/22 | A Wooden Axe - 01 | 300.00 |

D. S Soosaithas,
Judge of the High Court,
High Court of Northern Province,
Holden in Jaffna.

01-31

---

**மாவட்ட / நீதிவான் நீதிமன்றம்- பொத்துவில்**

அரசுடைமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத சான்றுப்பொருட்களை பகிரங்க ஏல விற்பனை செய்தல்

இந் நீதிமன்றில் வழக்குகளுடன் தொடர்புடைய சான்றுப் பொருட்கள் என முன்வைக்கப்பட்ட பொருட்களில் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் 2025.01.18 ஆந் திகதி மு.ப. 9.30 மணியிலிருந்து பொத்துவில் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

இதில் கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள் சம்பந்தமாக யாராயினும் உரிமை கோருவாராயின் ஏல விற்பனை ஆரம்பிக்கப்பட முன்னராக அதன் உரிமையாளர் தமது உரிமைக்கோரிக்கையை முன் வைக்க முடியும்.

ஏல விற்பனைக்கெனத் தீர்மானிக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை நடைபெறும் தினத்தில் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னராக நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியைப் பெற்றுப் பார்வையிட முடியும்.

நீதிமன்றினால் தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை எட்டப்படாத சந்தர்ப்பத்தில் நீதிமன்றின் தற்றுணிவின் பிரகாரம் அந்தப் பொருட்களை ஏல விற்பனையிலிருந்து விலக்கிக் கொள்வதற்கு நீதிமன்றிற்கு அதிகாரம் உள்ளது.

ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் பொருட்களை அவ்விடத்திலேயே பணத்தைச் செலுத்தி அதே தினம் நீதிமன்ற வளாகத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்வதுடன் பணமாக மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏல விற்பனையின் போது பொருட்களைக் கோருபவர் தனது விபரத்தைக உறுதிப்படுத்துமுகமாக தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| *ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருள்* | *அளவு* |
|---|---|
| ஆற்றுமணல் | 36 கியூப் |

எம்.கே.எம். ஹில்மி,
மாவட்ட நீதிபதியும் நீதிவானும்.

மாவட்ட / நீதிவான் நீதிமன்றம்,
பொத்துவில்.
2025.01.01.

01- 43

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்9(1) ஆம் பிரிவின் கீழ் கீழ்க்காணும் கம்பனியானது 2024, திசெம்பர் 27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவித்தல் விடுக்கின்றது.

*கம்பனியின் பெயர் :* இன் தா சர்ச் (பீவீடீ) எல்டிடீ
*பதிவு இலக்கம் :* PV - 00318221
*பதிவு அலுவலக முகவரி :* இல.835/ 2B, 1 ஆம் மாடி, புதிய பாராளுமன்ற வீதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே

சபையின் கட்டளைப் பிரகாரம்,

மின்னேரி பிட்டியகே தொன் சான்கா
மனிஷா கருணாரத்ன,
செயலாளர்.

97/ A, கடவத்த வீதி,
களுபோவில.

01- 51

---

## அறிவித்தல்

A P I ஏஜன்சீஸ் ( பிறைவேட்) லிமிடெட் (PV 6522) ஐ A P I டிரேட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டெட் (PV 6215) உடன் கூட்டிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 241 (4) (b) இற்கு அமைவாக மேலே குறிப்பிட்ட கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டு ஒரே நிறுவனமாக எதிர்காலத்தில் A P I டிரேட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டெட் எனும் பெயரின் கீழ் இயங்கும் என மேற் குறிப்பிட்ட கம்பனிகளின் இயக்குனர்கள் சபைகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டிணைக்கப்பட்ட இக் கம்பனிகள் 2025, மார்ச்சு 01 ஆந் திகதி அல்லது கம்பனிகளை பதிவு செய்யும் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

மேற்கூறிய நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குநராலும் அல்லது மேற்கூறிய நிறுவனங்கள் ஏதேனும் விதத்தில் எந்தவொரு நபருக்கு கடமை அல்லது பொறுப்புடையவராக இருந்தால் அந்நபராலும், மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட அலுவலகங்களில் ( இல.38, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 03 மற்றும் இல.56, தர்மபால மாவத்தை, கொழும்பு 07) கூட்டிணைத்தல் பற்றிய முன்மொழிவின் நகல்களை வழக்கமான அலுவலக நேரத்தில் ஆய்வு செய்ய முடியும். மேலும் அந் நபர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் கூட்டிணைத்தல் பற்றிய முன்மொழிவின் நகலை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

A P I ஏஜன்சீஸ் ( பிறைவேட்) லிமிடெட் மற்றும் A P I டிரேட்ஸ் ( பிறைவேட்) லிமிடெட் இன் இயக்குனர்கள் சபைகளின் உத்தரவின் பேரில்,

CG கோர்பரேட் கன்சல்டன்ஸ் ( பிரைவேட்) லிமிட்டட் ,
செயலாளர்.

01- 184